සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

2ம் தவணை மதிப்பீடு - 2018

| ශ්‍රේණිය தரம் Grade | 08 | විෂයය பாடம் Subject | வரலாறு I,II | காலம் : 2 மணித்தியாலங்கள் |
|---|---|---|---|---|

பெயர்:...................................... பரீட்சை இல :...............................

**கவனத்திற் கொள்க.**

- **பகுதி – I இல் சகல வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்க.**
- **பகுதி – II இற்குரிய விடைகளை வேறு தாளில் எழுதி, பகுதி –I உடன் இணைத்து கையளிக்க.**

## பகுதி –I

01. புராதன காலத்தில் காணுவாவி என அழைக்கப்பட்ட குளம்,

1. மகா கணதரா வாவி
2. கலா வாவி
3. மகாவிலச்சிய குளம்
4. மாதுகம வாவி

02. இலங்கையில் பெருங்குளங்கள் கட்டுவதில் முன்னோடியாக கருதப்படுபவர்,

1. தேவநம்பிய தீச மன்னன்
2. தாதுசேன மன்னன்
3. வசப மன்னன்
4. மகாசேன மன்னன்

03. புராதன காலத்தில் கட்டப்பட்ட, நிரந்தர அணைக்கட்டிற்கான சிறந்த உதாரணம்,

1. எலகர அணை
2. தேக்கம் அணை
3. மினிப்பே அணை
4. ஹத்தொட்ட அணை

04. அதிக அழுத்தத்துடன் குளத்திலிருக்கும் நீரை அணைக்கட்டினூடாக காலவாய்க்கு விடுவிக்க நிர்மாணிக்கப்பட்டது,

1. அலைதாங்கி
2. கலிங்கல் தொட்டி
3. மதகு
4. வான்கதவு

05. பத்மஸ்வர எனும் பெயரில் பூங்கா அமைத்த மன்னன்,

1. மூத்தசீவ மன்னன்
2. குட்டகண்ணதிஸ்ஸ மன்னன்
3. முதலாவது காசியப்ப மன்னன்
4. முதலாம் அக்போ மன்னன்

06. புராதன செங்கல்லின் உறுதிக்கு சமமான செங்கற்களை உற்பத்தி செய்து, சிறிது காலத்திற்கு முன் புனரமைப்பு செய்யப்பட்ட தாதுகோபம்,

1. அபயகிரி தாதுகோபம்
2. தூபாராம தாதுகோபம்
3. ருவன்வெலி தாதுகோபம்
4. ஜேதவன தாதுகோபம்



kalvi.lk

07. கண்டி இராசதானிக்கு நுழையக்கூடிய பாதைகள் இரண்டையும் குறிப்பிடும் விடை,

1. கலகெதர, பிலிமதலாவ
2. பலன, பேராதெனிய
3. ஹந்தான, உடவத்த
4. பலன, உன்னஸ்கிரிய

08. ▪ கண்டியில் புதிய அரச வம்சம் ஆரம்பித்தமை.

▪ தெல்கமுவ விகாரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தந்ததாதுவை கண்டிக்கு கொண்டு வந்தமை.

மேற்கூறப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய மன்னன்,

1. முதலாம் விமலதர்மசூரிய மன்னன்
2. முதலாம் இராஜசிங்க மன்னன்
3. இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன்
4. ஸ்ரீ விக்ரம பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன்

09. கலையம்சம் பொருந்திய மரச்செதுக்கல்களை காணக்கூடிய இடம்,

1. மெதவல டெம்பிட்ட விகாரை
2. லங்காதிலக விகாரை
3. எம்பக்கே தேவாலயம்
4. கடலாதெனிய விகாரை

10. ▪ கரையோரத்தை ஆட்சிபுரிந்த ஒல்லாந்தருடன் நட்புறவு கொண்டமை.

▪ பர்மாவிலிருந்து குருமாரை வரவழைத்து எபசம்பதா வைபவத்தை நடாத்தியமை.

மேற்படி காரியங்களை ஆற்றிய மன்னன்,

1. இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன்
2. இரண்டாம் இராஜசிங்க மன்னன்
3. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன்
4. இராஜாதி இராஜசிங்க மன்னன்

11. 'அ' பகுதியை 'ஆ' பகுதியோடு இணைத்தால் வரும் விடையானது,

| அ | ஆ |
|---|---|
| 1. இறுதி இராப்போசணம் | A- கலிலியோ கலிலி |
| 2. இறுதித்தீர்ப்பு | B- மைக்கல் அஞ்சலோ |
| 3. புனித கோவானின் சிலை | C- டொனடெலோ |
| 4. தொலைநோக்கி | D- லியனாடோடாவின்சி |

1. ABCD
2. DBAC
3. BDCA
4. DBCA

12. மறுமலர்ச்சி காலத்தில் தோன்றிய வர்த்தக நகரம் அல்லாதது,

1. வெனிஸ்
2. ஜெனோவா
3. புளோரன்ஸ்
4. பாதுவா



kalvi.lk

13. கோள் மண்டலத்தில் சகல கோள்களும் நீள்வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றி வருவதாகக் கூறியவர்,

1. நிக்கலர்ஸ் கொப்பனிக்கல்ஸ் 2. ஜொகன்னர்ஸ் கெப்லர்
3. ஐசக் நியூற்றன் 4. கலிலியோ கலிலி

14. போர்த்துக்கேயர் படுதோல்வியடைந்த கன்னொருவை போரை தலைமை தாங்கிய போர்த்துக்கேய தளபதி,

1. ஜெரோலோபேஸ்த அல்மேதா 2. ஜெரனிமோத அசவேது
3. தியோகு த மெலோ 4. கொன்ஸ்தாந்தினூத சா


15. சேனா சம்மத விக்ரமபாகு மன்னனைப் பற்றிய பிழையான கூற்று,

1. கண்டி இராச்சியத்தின் ஆரம்ப ஆட்சியாளன்.
2. இவருக்குப் பின் ஜயவீர பண்டார அரசனானார்.
3. ஜோதிய இளவரசனின் கிளர்ச்சிக்கு முகங்கொடுத்து வெற்றி கண்டார்.
4. கோட்டை நிர்வாகத்திலிருந்து செங்கடகலையை விடுவித்தார்.

16. மத்திய கால யுகத்தின் இறுதியில் இத்தாலியில் தோன்றிய பல்கலைக்கழகம்,

1. பொலஞ்ஞோ 2. பரிஸ் 3. ஒக்ஸ்போர்ட் 4. கேம்பிரிஜ்

- **இலக்கம் 17 – 20 வரையான வினாக்களுக்கு பின்வரும் இலங்கை வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்க.**




17. “A” எழுத்தில் குறிப்பிடப்படும் வாவி எது?

1. மின்னேரியா வாவி 2. கலா வாவி
3. நாச்சதுவ வாவி 4. யோத வாவி

18.”B” எழுத்தில் குறிப்பிடப்படும் நதி எது?

1. மல்வத்து ஓயா 2. கலா ஓயா
3. தெதுறு ஓயா 4. யான் ஓயா

19. “C” எழுத்தில் காட்டப்பட்டுள்ள வரலாற்று சிறப்பு மிக்க நகரம் எது?

1. அநுராதபுரம் 2. கம்பளை
3. கண்டி 4. தம்பதெனியா

20. “D” எழுத்தில் காட்டப்பட்டுள்ள வரலாற்று சிறப்பு மிக்க நகரில் காணப்படும் பொய்கை,

1. குட்டம் பொய்கை 2. தாமரை பொய்கை 3. எத் பொய்கை 4. ரஜகல பொய்கை

(2x20=40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி –II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **ஏனைய வினாக்களில் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.**
- **விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை ஐந்து.**

(01) (I) பின்வரும் A,B எனக்காட்டப்பட்டுள்ள உருக்களைக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

**A**



(m) (i) A உருவில் காட்டப்பட்டுள்ள மன்னனைப் பெயரிடுக.

(ii) இவர் எந்த அரச வம்சத்தவர்?

(iii) இவரை அரசராக்க நடவடிக்கை எடுத்த மகா அதிகாரம் யார்?

(iv) இம்மன்னனால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சிறந்த சேவையைக் குறிப்பிடுக.

**B**



(M) (i) B உருவில் காட்டப்பட்டுள்ள கட்டடம் யாது?

(ii) இது எச்சமயத்துடன் தொடர்புடையது?

(iii) இதனை நாம் எவ்வரலாற்று சிறப்பு மிகக் நகரில் காணலாம்?

(iv) இதில் காணப்படும் கட்டடக்கலை மரபு எது?

(2x8=16 புள்ளிகள்)

(02) (i) வசப மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட குளங்கள் இரண்டைப் பெயரிடுக.(02 புள்ளிகள்)

(ii) புராதன காலத்தில் கால்வாய் அமைப்பதன் தேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(iii) மகாவாவிகளை நிர்மாணிக்க முகங்கொடுக்க வேண்டியச வால்கள் இரண்டை விளக்குக.

(05 புள்ளிகள்)



kalvi.lk

(03) (i) ஆரம்ப காலத்தில் இந்நாட்டில் இரும்புருக்கு நடைபெறற்மையை விளக்க சான்றுகள் கிடைக்கப்பெற்ற பிரதேசங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) உலோகத் கைத்தொழில்களில் ஈடுபட்ட பின்வரும் நபர்களை கல்வெட்டுகள் எப்பெயர்களால் குறிப்பிடுகின்றன?

a) உலோக வேலை செய்வோர் b) தகர வேலை செய்வோர் (04 புள்ளிகள்)

(iii) அக்காலத்தில் இந்நாட்டில் தங்கக் கைத்தொழில் மிகவும் சிறப்பாக வளர்ச்சி அடைந்திருந்தது என்பதனை இரு உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

(04) (i) கண்டி இராசதானிக்கு வழங்கப்பட்டுவந்த பெயர்கள் இரண்டைக் குறிப்பிடுக.(02 புள்ளிகள்)

(ii) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்கு மேற்கொண்ட மேன்மையான சேவைகள் இரண்டை உதாரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) கண்டி யுகத்தில் சித்திரக் கலையின் சிறப்பம்சங்கள் தொடர்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுக. (05 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

(05) (i) கண்டி இராச்சிய காலத்தில் இந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களைத் தருக.

A- சிங்கள அரச வம்சத்தின் இறுதி மன்னன்.

B- குசுமாசனதேவியை மணந்து அரசுரிமையை உறுதிசெய்த மன்னன்.

C- பொலனறுவை ரன்கொத் விகாரையை அமைத்த மன்னன்.

D- ஆங்கிலேயர் கரையோரப் பிரதேசத்தைக் கைப்பற்றும்போது கண்டியை ஆண்ட மன்னன். (04 புள்ளிகள்)

(iii) கண்டி இராச்சியத்தின் சமூக அமைப்பு பற்றி சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

(06) (i) மத்தியகால பகுதியின் இறுதியில் ஐரோப்பாவில் தோன்றிய பின்வரும் பல்கலைக்கழகங்கள் அமைந்துள்ள நாடுகளைப் பெயரிடுக.

A- பாதுவா B- கேம்பிரிஜ் (02 புள்ளிகள்)



kalvi.lk

(ii) மறுமலர்ச்சி காலத்தில் தோன்றிய கலைகளில் காணக்கூடிய விசேட அம்சங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்பட ஏதுவான காரணிகள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(07) (i) மறுமலர்ச்சி காலத்தில் தோன்றிய எழுத்தாளர்கள் இருவரைக் குறிப்பிடுக.(02 புள்ளிகள்)

(ii) பின்வரும் விஞ்ஞானிகளது கண்டுபிடிப்புகளைத் தருக.

A- வில்லியம் ஹார்வே B- வைத்தியர் பெரசல்ஸ் (04 புள்ளிகள்)

(iii) மறுமலர்ச்சி காலத்தில் ஏற்பட்ட மதச்சீர்த்திருத்தம் பற்றி சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி அධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page